# ஒருங்கிணைந்த நகரத்திடக் கழிவு மேலாண்மை திட்டம் - அம்பத்தூர் , பூந்தமல்லி, மதுரவாயில், திருவேற்காடு மற்றும் வளசரவாக்கம் நகராட்சிகள்




# செயல் திட்ட சுருக்கம்

## சூலை – 2010

## அம்பத்தூர் நகராட்சி
## AMBATTUR MUNICIPALITY

திட்ட தயாரிப்பு

DARASHAW 1926
ALL ABOUT TRUST


**தராஷா & கம்பெனி பிரைவெட் லிமிட் ,**

“யுனிக ஸ்டெர்லிங் குடியிருப்பு”

8/2 3 வது குறுக்குத் தெரு, ஸ்டெர்லிங் சாலை,

நுங்கம்பாக்கம் - 600 034

தொ.எண்: 044-2826 7910 தொலை நகல்: 044-2822 6635

ABC Save Nature for Future

**ஏபிசி என்விரான் சொல்யுசன்ஸ் (பி) லிமிடெட்,**

எண்.2, 2வது தெரு, தங்கம் காலனி, அண்ணாநகர் மேற்கு,சென்னை-600 040.

தொ.எண் :+91-44-26161123 / 24 / 25 /26,

அஞ்சல்:abc@abcenviron.com, இணையதளம் : www.abcenviron.com

அவசர உதவி எண்: 94442 60000

# செயல் திட்ட சுருக்கம்

## திட்டம்

குத்தம்பாக்கம், பூந்தமல்லி தாலுகா பகுதியில் நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 படி நாளொன்றிக்கு 455 டன்கள் நகரத்திடக் கழிவுகளை பதனிடுவதற்கு நிலையம் அமைக்கப்பட உள்ளது. இந்நிலையத்தில் துரிதமாக உரமாக்குதல், கழிவு மீட்பு எரிபொருள் (RDF), மறுசுழற்சிக்குரிய பொருள்களைப் பிரித்தெடுத்தல், சூழலியல் செங்கற்களை தயாரித்தல், மற்றும் தேவையற்ற மக்காத பொருள்களை நலநிலை குழியில் நிரப்பல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடபட்டுள்ளது.

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர்: | ஒருங்கிணைந்த நகரத்திடக் கழிவுகளை பதனிடும் நிலையம் குத்தம்பாக்கத்தில் அமைய உள்ளது. இங்கு நாளொன்றிக்கு 455 டன்கள் நகரத்திடக் கழிவுகளை, பதனிட திட்டமிடபட்டுள்ளது. துரிதமாக உரமாக்குதல், கழிவு மீட்பு எரிபொருள் (RDF), மறுசுழற்சிக்குரிய பொருள்களைப் பிரித்தெடுத்தல், சூழலியல் செங்கற்களை தயாரித்தல், மற்றும் தேவையற்ற மக்காத பொருள்களை நலநிலை குழியில் நிரப்பல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடபட்டுள்ளது. |
| திட்டம் அமையும் இடம்: | குத்தம்பாக்கம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் தமிழ்நாடு. |
| திட்ட அளவு: | நாளொன்றிக்கு 455 டன்கள் நகரத்திடக் கழிவுகளை பதனிடும் நிலையம 65 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட உள்ளது. |
| இத்திட்டத்தின் மதிப்பீடு: | ரூபாய் 55 கோடிகள் |
| திட்ட முனைவர்: | ஆணையர் ,<br>அம்பத்தூர் நகராட்சி<br>சென்னை- 600 053 |

044- 26250231

commr.ambattur@tn.gov.in

தொடர்பு விவரம்: தராஷா & கம்பெனி பிரைவெட் லிமிட் ,
"யுனிக் ஸ்டெர்லிங் குடியிருப்பு"
8/2 3 வது குறுக்குத் தெருஇ ஸ்டெர்லிங் சாலைஇ
நுங்கம்பாக்கம் - 600 034
044 28267910
t-anandmohan@darashaw.com

**பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம்**

---

ஒருங்கிணைந்த நகரத்திடக் கழிவுகளை பயன்படும் திடப்பொருளாக மாற்றும் பதனிடும் நிலையத்தில் துரிதமாக உரமாக்குதல், கழிவு மீட்பு எரிபொருள் (RDF), மறுசுழற்சிக்குரிய பொருள்களைப் பிரித்தெடுத்தல், சூழலியல் செங்கற்கள் தயாரித்தல் மற்றும் தேவையற்ற மக்காத பொருள்களை நலநிலை குழியில் நிரப்பல்.

**திட்டத்தின் உரிமையாளர்**

---

அம்பத்தூர், பூந்தமல்லி மதுரவாயில், திருவேற்காடு மற்றும் வளசரவாக்கம் நகராட்சிகள்

**தொழில்நுட்ப நிலை**

---

நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 த்தின் படியும், உச்சநீதி மன்ற தொழில் நுட்ப கமிட்டி மற்றும் நகர் புற வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் அமைக்கப்பட்ட பல்வேறு அமைச்சகங்களின் செயற்குழு சிபாரிசுகளின் படியும், திடக்கழிவுகளை ஆக்ஸிஜனேற்ற தொகுப் பெருவாக்கத்தின் மூலம், குறிப்பிட்ட நிலைப்படி உரமாக்குதல், கழிவு மீட்பு எரிபொருள் மற்றும், கல் மணல் போன்ற பொருள்களில் சூழலியல் செங்கற்கள் தயாரித்தல் இத்திட்டமானது இருவித ஒருங்கிணைந்த திட்டமாகும். ஒன்று நகரத்திடக்கழிவுகளை எல்லா அம்சங்கள் உள்ளடங்கிய வழியில் மேலாண்மையை மேற்கொள்ளுதல், மற்றொன்று ஒருங்கிணைந்த பதனிடும் தொழில் நுட்பங்களை கையாண்டு, சிறிய அளவிலேயே, தேவையற்ற மக்காத கழிவுகளை நலநிலை குழிநிரப்பிலில் நிரப்புதலாகும்

## பதனிடும் முறையை செயலாக்குதல்

ஒருங்கிணைந்த நகரத்திடக் கழிவுகளை பதனிடும் திட்டதிமானது கிழ்கண்ட அங்கங்களை உள்ளடக்கியது.

- **நகரத்திடக் கழிவுகளின் முதன்மை சேகரிப்பு:** சம்மந்தப்பட்ட நகராட்சி பகுதிகளில் வீடுவிடாக குப்பைகளை சேகரிக்கும் முறையை செயல்படுத்துதல்.

- **நகரத்திடக் கழிவுகளை எடுத்து செல்லும் முறை :** நகரத்திடக் கழிவுகளைசேகரித்த பிறகு அதை வாகனத்தில் மூடிய நிலையில் குத்தம்பாக்கத்தில்வுள்ள ஒருங்கிணைந்த நகரத்திடக் கழிவுகளை பதனிடும் நிலையத்திற்கு கொண்டு சொல்லப்படும் மறுசுழற்சிக் குரிய பொருட்களை மறுபயன்பாட்டிற்கு கொடுக்கப்படும்.

- **மாற்று நிலையம்:** ஐந்து நகராட்சிகளில் இருந்து சேகரித்த நகரத்திடக் கழிவுகளை தற்காளிகமாக அதற்குரிய மாற்று நிலையகளிலே சேகரித்து பின்பு அதை ஒருங்கினைந்த நகரத்திட கழிவுகள் பதனிடும் நிலையத்திற்கு கொண்டு சென்று, கண்ணாடி, உலேகங்கள் மற்றும் பிளாஸ்டிக்கு பொருட்கள் அனைத்தினையும் பிரிக்கப்பட்டு , மறுபயன்பாட்டிற்கு வாங்கும் வணிகர்களுக்கு விற்கப்படும்

வருடம் முழுவதும் திடக்கழிவுகளை கொணந்து பதனிடப்படும். பதனிடும் முறை பின்வருமாறு:

நகர திடக்கழிவுகளை நலநிலை குழியில் அனுப்பபடுவதற்கு முன்பு, உரத்திற்கும் மற்றும் கழிவு மீட்பு எரிபொருளுக்கு உகந்த கழிவுகளைப் பதனிடுதல், நகராட்சி திடக்கழிவுகளில் 15-20 விழுக்காடு வரையிலான மக்காத திடப்பொருள்கள் மற்றும் பதனிடும் முறைகளிலிருந்து அகற்றப்பட்ட கழிவுகளை் நலநிலை குழியில் நிரப்படும்.

பதனிடுதல் மற்றும் திடக்கழிவுகளைஅப்புறப்படுத்தல் போன்ற தேவைகளுக்கு, குத்தம்பாக்கம் நிலப்பகுதியில் ஒரு வளாகமாக மேம்படுத்தப்படும். இத்தகைய வளாகத்தில் கீழ்க்கண்ட பதனிடும் முறைகள் கையாளப்படும்.

- **நாளொன்றுக்கு 91 டன்கள் கழிவு மீட்பு எரிபொருள்** - கழிவுகள் கலந்த நகர திடக்கழிவுகளிலிருந்து நாளொன்றுக்கு 49.1 டன்கள கழிவு மீட்பு எரிபொருள் உற்பத்தி செய்யப்படும்.
- **நாளொன்றுக்கு 227.5 டன்கள் நகர திடக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் நிலையம்** - நகர திடக்கழிவுகளிலிருந்து உரத்திற்கு ஏற்ற மக்கும் பொருள்களை

பிரித்தெடுத்து அவைகளை உரமாக்கும் நிலையத்தில் 109.1 டன்கள் உரம் தயாரித்தல்.

- **மறுசுழற்சிக்கு ஏற்ற பொருள்களை மறுபயன்பாட்டிற்காக பிரித்தெடுத்தல் -** பிளாஸ்டிக் பொருள்களை பிரித்தெடுத்து மறுபயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். எல்.டி.பி.இ, எச். டி.பி.இ, பி வி சி மற்றும் பெட் பொருள்களை ஆரம்ப நிலைகளிலேயே பிரித்தெடுக்கப்படும். ஏனெனில் பிரித்தெடுக்கப்பட்ட பொருள்கள் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டதாகவும் வெவ்வேறு மறு பயன்பாட்டிற்கு உகந்தவைகளாகவும் இருக்கும். மறுசுழற்சிக்கு பயன்படும் பொருள்கள் நாளொன்றுக்கு 34.15 டன்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.
- **சூழலியல் செங்கற்கள்** - மக்காத மற்றும் மணல் போன்ற திடக்கழிவுகளைக் கொண்டு சூழலியல் செங்கற்கள் மற்றும் சூழலியல் தள கற்கள் உருவாக்கலாம். நாளொன்றுக்கு 13.65 டன்கள் சூழலியல் செங்கற்கள் உற்பத்தி செய்யலாம்.
- **நலநிலை குழியில் நிரப்பல்** - கழிவு மீட்பு எரிபொருள் மற்றும் உரம் தயாரிக்கும் நிலையத்தில் இருந்து அகற்றப்பட்ட திடக்கழிவுகள், சூழலியல் செங்கற்கள் தயாரிக்கும் நிலையத்தில் இருந்து அகற்றப்பட்ட திடக்கழிவுகள் நலநிலை குழியில் நிரப்பப்படும். நலநிலை குழியில் நாளொன்றுக்கு 80.65 டன்கள் நிரப்பலாம்.

இத்திட்டத்தின வரைப்படம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டின் அறிக்கையின், பின் இணைப்பு -VI ஆக இணைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நகர திடக்கழிவு மேலாண்மை நிலையத்தின் சுத்திகரிக்கும் நிலையத்தின் சிறப்பியல்புகள்

- திட்டத்தின் செலவு மதிப்பீடு-55 கோடி
- பரப்பளவு -65 ஏக்கர்
- நகரத்திடக் கழிவு மேலாண்மை நிலையத்தின் திறன்-நாளொன்றிற்கு 1140டன்கள் (2030)
- நகரத்திடக் கழிவு மேலாண்மை நிலையத்தின் திறன்-நாளொன்றிற்கு 455டன்கள் (2015)
- இயற்கை உரம்-109 டன்
- கழிவு மீட்பு எரிபொருள-49 டன்
- நீரின் தேவை -86 கிலோ லிட்டர் ஒரு நாளைக்கு
- கிடைக்கும் நீர் - நிலத்தடிநீர் (ஆழ்துளை கிணறு)

இத்திட்டத்தின் தொடர்புச்சாலை விவரங்கள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டின் அறிக்கையின் வரைபடம்- 3.2 இல் இணைக்கப்பட்டுள்ளது.

**மாற்று நிலையத்தின் விவரங்கள்**

| **மாற்று நிலையகள்** | **நகராட்சி** | **இடப்பரப்பளவு** | **சர்வே எண்** |
|---|---|---|---|
| அத்திபட்டு | அம்பத்தூர் | 21550 | 29 |
| மதுரவாயில் | மதுரவாயில் மற்றும் வளசரவாக்கம் | 5900 | 446 |
| திருவேற்காடு | திருவேற்காடு | 11130 | 22 |
| இடுகாடு அருகில் | பூந்தமல்லி | 6015 | 219 |

**2015ஆம் ஆண்டிற்காக ஒவ்வொரு மற்று நிலையங்களில் கழிவுகளை கையாளும் கொள்ளவு**

| **திடக் கழிவு விவரங்கள்** | **மாற்று நிலையகளின் இருப்பிடம்** | | | |
|---|---|---|---|---|
| | **அம்பத்தூர்** | **பூந்தமல்லி** | **மதுரவாயில்*** | **திருவேற்காடு** |
| மொத்த நகர திடக்கழிவு உற்பத்தியாகும் அளவு (நகர திடக்கழிவு உற்பத்தி/ நாளொன்றிக்கு நபர் ஒன்றக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளின் எடை @522 கிராம்கள்) | 318 | 41 | 70 | 26 |
| கரிமக் கழிவுகள் (@50 விழுக்காடு) | 159 | 20.5 | 35 | 13 |
| உலர்ந்த மற்றும் எரியக்குடிய கழிவுகள் (@20 விழுக்காடு ) | 63.6 | 8.2 | 14 | 5.2 |
| மீள் சுழற்சி திடக்கழிவுகள் (@15 விழுக்காடு ) | 47.7 | 6.15 | 10.5 | 3.9 |
| செயலற்ற கழிவு (@15 விழுக்காடு ) | 47.7 | 6.15 | 10.5 | 3.9 |

* மதுரவாயில் மற்றும் வளசரவாக்கத்திற்கு ஒரே மாற்று நிலையம் (பொது)

## திட்டப்பகுதியின் விவரங்கள்

| தகவல் விவரம் | விவரம் |
|---|---|
| அட்சரேகை | 13º02'06" வடக்கு |
| தீர்க்கரேகை | 80º01'38 கிழக்கு |
| தட்பவெட்பம் | கோடை அதிகம்: 37.9°<br>குறைவு: 25.5° |
| | குளிர் அதிகம்: 23.7°<br>குறைவு: 18.5° |
| | மழை நீரின் அடர்த்தி: 62 மி.மீ<br>ஈரப்பதம் : 68% |
| கிடைக்கும் நிலப்பரப்பு | 65 ஏக்கர் |
| சுற்றுப்புற நிலப்பரப்பு | மேய்ச்சல் புறம்போக்கு |
| தேசிய நெடுஞ்சாலை | NH4 – சென்னை, பெங்களூரு |
| அருகிலுள்ள ரயில் நிலையம் | திருநின்றவூர் (11Km) |
| அருகிலுள்ள விமான நிலையம் | சென்னை (17Km) |
| அருகிலுள்ள நகரம் | ஸ்ரீபெரும்புதூர் - 12Km<br>சென்னை –20Km<br>திருவள்ளூர் - 18Km |
| நிலஅமைவு | சமவெளி |
| தொல்பொருள் தன்மை வாய்ந்த முக்கிய இடங்கள் | 15 கிமீகுள் இல்லை |
| தேசிய பூங்கா / வனத்துறை சரணாலயம் | 15 கிமீகுள் இல்லை |
| பூகம்ப மண்டலம் | பூகம்ப மண்டலம் - இரண்டு |
| கிடைக்கும் நீர் | நிலத்தடிநீர் (ஆழ்துளை கிணறு) |
| இராணுவத்தளங்கள் | இல்லை |
| துறைமுகம் | சென்னை |

இத்திட்டத்தின் திட்ட நிலஅமைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டின் அறிக்கையின் வரைபட எண் 4.6 இல் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சுற்றுச்சூழல் தன்மைகளான காற்று, நிலம், நீர், ஒலி, நீர்நிலை, நிலப்பயன்பாடு தட்பவெட்பநிலை, சமூகப் பொருளாதார சூழல், உயிர் சூழலியல் ஆகியவற்றை ஆராய்ந்து அடிவரை அளக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது.

திட்ட இருப்பிடத்திலிருந்து 10கி.மீ தொலைவிற்கு உள்ள நிலப்பாட்டில் அடிவரை அளக்கை தயாரிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீடு ஏப்ரல் முதல் ஜீன் 2010 வரையிலான மூன்று மாதங்களில் ஆய்வு செய்து தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **தட்பவெட்பம்** | இவ்விடத்தின் ஒரு நாளிற்கான தட்பவெட்ப நிலை கோடை காலத்தில் அதிகமாக 37.9° குறைவக : 25.5° உள்ளது . வானம் தெளிவாகவும், காற்றின் திசை தென்கிழக்கை நோக்கி வீசுவதாக அறியப்பட்டது. |
| **காற்றின் தன்மை** | காற்றின் தன்மை ஐந்து இடங்களில் கண்காணிக்கப்பட்டது இதில் ஒரு இடம் திட்ட இடத்திலும் மற்ற நான்கு இடங்களில் காற்றின் தன்மையினை அறிய காற்று வீசும் ஆரம்ப திசையலும் காற்று வீசும் திசையலும் முறையே இரண்டு மாதிரி நிலையங்கள் அமைக்கப்பட்டன. இதில் 10 மைக்ரோ மீட்டர் அளவு கொண்ட துணுக்குகள், கந்தக டைஆக்ஸைடு, ரைட்ரஜன், டை-ஆக்ஸைடுகள் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வரையறுக்கப்பட்ட அளவிற்குள் உள்ளது. |
| **ஒலி அளவு** | ஒலியின் அளவு பகல் மற்றும் இரவு நேரங்களில் அளவிடப்பட்டது. இதில் குடியிருப்புப் பகுதியன் ஒலியளவு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வரையறுக்கப்பட்ட அளவில் இருந்து சற்றே அதிகமாக உள்ளது. |
| **நீரின் தன்மை** | ஆய்வுப் பகுதியில் நீரின் தன்மை அறியப்பட்டு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வரையறுக்கப்பட்ட அளவிற்குள் உள்ளதா என பார்க்கப்பட்டது. வடிகால் அமைப்பினை பார்த்து நிலத்தடிநீர் ஐந்து இடங்களிலிருந்தும், செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நீர் எடுத்து ஆராயப்பட்டது. நிலத்தடி நீர் மாதிரிகள் அத்திப்பட்டு, மதுரவாயல், |

| | |
|---|---|
| | பாரிவாக்கம் மற்றும் திருவேற்காடு பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்டது. இதில் நான்கு இடங்களில் கரைந்த திடப்பொருள் வரையறுக்கப்பட்ட அளவிற்கு மேல் உள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து எடுக்கப்பட்ட நீர் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வரையறுக்கப்பட்ட அளவிற்குள் உள்ளது. |
| **மண்ணின் தன்மை** | மண்ணின் pH 5 முதல் 8 வரை உள்ளது. இதனால் இம்மண்ணானது தாவர வளர்ச்சிக்கு உருதுணையாக உள்ளது. மின் கடத்தும் திறன் மிகவும் குறைவாக உள்ளது அதனால் இம்மணல் உப்புத்தன்மையற்றதாக உள்ளது. |
| **சமூகபொருளாதார சூழல்** | திட்ட இடமானது பூந்தமல்லி தாலுகாவின் கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. பூந்தமல்லியில் உள்ள குடியிருப்புக்கள் மொத்தம் 9390 இங்கு 16 தொழிற்பேட்டைகள் உள்ளன. இங்கு நிறைய கல்வி நிலையங்கள் உள்ளன. |

## சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் மேலாண்மைத் திட்டம்

சுற்றுச்சூழலின் தாக்கம் கட்டுமானநிலை மற்றும் இயக்க நிலைகளுக்கு பொறியியல் மற்றும் தரமான மேலாண்மை பழக்கத்தைக் கொண்டு மதீப்பீடு செய்யப்பட்டது. கட்டுமான நிலையின் தாக்கம் தற்காலிகமானதாக அமையும். தேவையான சுற்றுச்சூழல் மேலாண்மை முறைகள் இத்திட்டத்தின் செயல்முறைபடுத்தப்படும். சுற்றுச்சூழல் மேலாண்மைக்கான செலவு சுமார் 1.38 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது.

**கட்டுமான நிலை**

- கட்டுமான உபகரணங்கள் புகை வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் விதத்தில் அமைக்கப்படும்.
- மண் மற்றும் நிலத்தடி நீரில் எந்த ஒரு கழிவு நீரும் கலக்கப்படாத வகையில் நச்சுத்தொட்டி, மற்றும் செங்கல், ஜல்லி கொண்ட தொட்டிகள் அமைக்கப்படும்.
- திடக்கழிவுகளைக் கொட்டும் இடங்களில் மூலிகை பூச்சிகொல்லி தெளிக்கப்படும், துர்நற்றம் வெளிவராமல் இருக்க செறுவூட்டப்பட்ட மூலிகைச்சாறு தெளிக்கப்படும்.
- இத்திட்டம் எதிர் அமுத்தத்தில் இருப்பதால் கட்டிடத்தில் சுத்தமான காற்றுவர வழி வகுக்கிறது.
- அனைத்து கழிவுகளும் வந்த 12 மணி நேரத்திற்குள் பதப்படுத்தப்படும்.

- ஒலிகளில் இருந்து காக்க தொழிலாளர்களுக்குக் காதடைப்பான் வழங்கப்படும் மரங்கள் வளர்க்கப்படும்.
- சாலைகளில் தண்ணீர் தெளிப்பான்கள் அமைக்கப்படும்.
- ஒழுங்காக பராமரிக்கப்பட்ட வாகனங்களளே பயன்படுத்தப்படும்.

**இயக்கநிலை**

- நகராட்சி மாற்று திடக்கழிவு நிலையங்களிலிருந்து நன்கு பராமரிக்கப்பட்ட வாகனங்களில் திடக்கழிவுகளை டார்பாலினால் மூடி ஒருங்கிணைந்த பதணிடும் இடத்திற்கு கொண்டுவரப்டும்.
- கழிவு மீட்பு எரிபொருளின் உமிழிகள் சைக்ளோன் மூலம் துாசிகள் பிரிக்கப்பட்டு சுத்தமான உமிழிகள் மட்டுமெ புகைபோக்கி வழியாக செலுத்தப்படும்.
- திட்டப்பகுதியியைச்சுற்றி பசுமை வளைவு ஏற்படுத்தப்படும்.
- மழைநீர் மேலாண்மைத்திட்டம் மேற்கொள்ளப்படும்.
- மழைநீர் நல நில குழிகளில் புகாவண்ணம் வடிகால்கள் அமைக்கப்பட்டு கரைந்துரிகளின் உற்பத்தி குறைக்கப்படும்.
- தேவையான தீயணைப்பு சாதனங்கள் பயன்படுத்தப்படும்.
- தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உரைகள் மற்றும் காலணிகள் வழங்கப்படும்.

**சுற்றுச்சூழல் மேலாண்மை ஒருங்கியம்**

---

- சுற்றுச்சுழல் மேலாண்மை திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு மேலாண்மை ஒருங்கியம் அமைக்கப்படும். இதன் அங்கங்களாவன
- கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு கழிவுநீரின் சுத்தகரிக்கப்பட்டு பசுமை போர்வைக்கு பயன்படுத்தப்படும்.
- சுற்றுச்சூழல் மேலாண்மை பிரிவு
- சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம்
- தனிமனிதப் பயிற்சி
- சுற்றுச்சூழல் தணிக்கை
- ஆவணச் சான்றுகள் பராமரித்தல்
- திட்டங்கள் மற்றும் பதிவுகள் பரமரித்தல்

**சுற்றுச்சூழல் கண்காணிப்பதற்குரிய செலவு**

வருடாந்திட சுற்றுச்சூழல் கண்காணிப்பதற்கு மற்றும் மாசுகட்டுபாடு தடுப்பு முறைகளை மேற்கொள்வதற்கு வருடாந்திரமாகும் செலவு ரூபாய் 1366 லட்சங்கள் என கணக்கிடப்பட்டு நிதி ஒதுக்கப்படும்.

**முடிவுரை**

இத்திடக்கழிவு பதனிடும் நிலையத்தில் எல்லா சுற்றுச்சூழல் தன்மைகளை ஆராய்ந்து அதற்குரிய தடுப்பு வழிமுறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் இந்த திட்டமானது எதிர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்தாது. அதோடு 80-85% திடக்கழிவுகள் உபயோகமான பொருள்காக மாற்றப்பட்டு 15-20% மட்டுமே நலநில நிரப்பலுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இதன் மூலம் எதிர்காலத்திற்கான நில பரப்பளவு குறைக்கப்படுகிறது.

**சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிடு அறிக்கை மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஒருங்கியம் தயரிப்பில் ஈடுபட்ட தொழில் நெறிஞுகள்**

| **தொழில் நெறிஞரின் பெயர்** | **கல்வி தகுதி** | **முன் அனுபவம் (வருடம்)** | **செய்ய பணி** |
|---|---|---|---|
| முனைவர்.ஆர்.கே.ஜெயசீலன் | முனைவர் | 35 | குழு தலைவர், அறிக்கையின் பொறுப்பாளர் |
| டீ.ஆனந்த் மோகன் | எம்.ஸ். (சுற்றுச்சூழல் பொறியியல்) | 19 | செயல்முறை பொறியாளர், சுற்றுச்சூழல் மேலாண்மைதிட்டம் |
| முனைவர்.சங்கீதா | முனைவர் (சுற்றுச்சூழலியல்) | 3 | திடக்கழிவு மேலாண்மை செயல்முறை விளக்கம் |
| வி.வி.எஸ்.மூர்த்தி | எம். டெக் (சுற்றுச்சூழல் பொறியியல்) | 5 | துரித உரமாக்குதல் நலநில நிரப்பல் செயல்முறை திட்டம் |
| ஸ்ரீனிவாச அவ்வாறு | பீ.ஈ கட்டடவியல் | 7 | துரித உரமாக்குதல் நலநில நிரப்பல் செயல்முறை திட்டம் |
| சிவகுமார்.சு | பீ.எஸ்சி. வேதியல் | 13 | தரக்கட்டுப்பாடு, சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம் |
| அ.ராப்ஸன்சின்னதுரை | எம்.ஸ்சி. வேதியல் | 10 | மாதிரி எடுத்தல் நீர், காற்று, மண்,ஒலீ பகுப்பாய்வு |
| ரமா பிரகாஷ் | எம்.ஸ்சி. சுற்றுச்சூழலியல் | 5 | சமூக செயல்முறை பொருளாதாரம் , சூழலியல் அறிக்கை, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு தடுப்பு முறைகள், அறிக்கை தயாரிப்பு. |
| சத்யா சம்பத் | எம்.ஸ்சி. சுற்றுச்சூழலியல் | 2 | சுற்றுச்சூழல் சட்ட வாக்கம் தாக்க மதிப்பீடு தடுப்பு முறைகள், அறிக்கை தயாரிப்பு. |
| ராஜகணபதி.ஜ | எம். ஈ. சுற்றுச்சூழல் மேலாண்மை | 1 | சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம் , அடிவரை அளக்கை |
| ரங்க ராஜ். ரா | எம். ஈ. சுற்றுச்சூழல் பொறியியல் | 6 மாதம் | சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம் , அடிவரை அளக்கை |